**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை - திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2023 ம் ஆண்டு செம்டம்பர் திங்கள் 21 ம் நாள் வியாழக் கிழமை
திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 4 ம் நாள்
TNNG13-000311-2019

**OS.No. 40/2019**

ரெங்கபாஷியம் .....வாதி

//எதிர்//

1. தனஞ்செயன்
2. ரெங்கநாயகி
3. செந்தில்குமார் ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 07.09.2018 ம் தேதி O.S. No.216/2018 என மயிலாடுதுறை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் O.S.No.40/2019 என கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 11.09.2023 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R. சிவபுண்ணியம் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. பாலமுருகன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் ஆஜராகததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 3 ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாகததால் 23.11.2018 அன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை ,இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து வந்து (21.09.2023) இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை :-**

வாதி அனுபவத்திலுள்ள தாவா B பட்டியல் சொத்திலுள்ள 6 முதல் 26 அயிட்ட சொத்துக்களில் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ ஆக்கிரமித்து அதிலுள்ள வேலியையோ, மரங்களையோ வெட்டி அப்புறப்படுத்தக்கூடாது என பிரதிவாதிகளுக்கு

எதிராக நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் வழங்க கோரி இவ்வழக்கனாது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வழக்குரையின் சுருக்கம்:</u>**

1. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி வாதியின் சகோதரர் ஆவார். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி. 3ம் பிரதிவாதி தாவா ஏ பட்டியல் சொத்தை பொறுத்து பெந்தக பத்திரத்தை 2ம் பிரதிவாதியிடமிருந்து எழுதி வாங்கிகொண்டவர்.

2. வாதியின் தகப்பனார் கடந்த 04.09.1977ம் தேதி ஒரு பதிவு பெற்ற உயில் சாசனத்தை எழுதிவைத்துள்ளார். அந்த உயில் பத்திரத்தில் A பட்டியலில் கண்ட சொத்து முத்துலட்சுமி அம்மாளுக்கும் B பட்டியல் சொத்தை வாதிக்கும், C பட்டியல் சொத்தை 1ம் பிரதிவாதிக்கும், D பட்டியல் சொத்தை கோவிந்தராஜனுக்கும், E பட்டியல் சொத்து ராஜன்பாபுவுக்கும், F பட்டியல் சொத்தை மைனர் இரண்டு ஆண்குழந்தைகளுக்கும் கொடுத்துவிட்டார். உயில் ஷரத்துப்படி மொத்தம் 8 ஏக்கர் 40 1/2 செண்ட் நிலத்தில் வடபுறத்தில் 2 ஏக்கர் 80–1/2 செண்ட் வாதிக்கு ஒதுக்கப்பட்டது. வாதி இடத்திற்கு தென்புறத்தில் 1ம் பிரதிவாதிக்கு 2 ஏக்கர் 80–1/2 செண்ட்டும் அதற்கு பின்புறத்தில் 2 ஏக்கர் 80–1/2 செண்ட் கோவிந்தராஜுக்கும் ஒதுக்கப்பட்டது. வாதியின் தகப்பனார் இறந்தபிறகு 1ம் பிரதிவாதி தனக்கு ஒதுக்கப்பட்ட C பட்டியலில் 2 ஏக்கர் 80–1/2 செண்ட் நிலத்தையும் வாதிக்கு பரிவர்த்தனையாக கொடுத்து அதற்கு பதிலாக வாதி தனக்கு சொந்தமான A பட்டியல் சொத்தை 1ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டார். அந்த வாய்மொழி பரிவர்த்தனைப்படி வாதி 8 ஏக்கர் 40–1/2 செண்ட்டில் வடபுறத்தில் ஒதுக்கப்பட்ட 2 ஏக்கர் 80–1/2 செண்ட் நிலத்தையும் 1ம் பிரதிவாதிக்கு நடுவில் ஒதுக்கப்பட்ட 2 ஏக்கர் 80–1/2 செண்ட்டையும் சேர்த்து 5 ஏக்கர் 61 செண்ட் நிலத்தை ஒரே யூனிட்டாக வாதி அனுபவித்து வருகிறார். 1ம் பிரதிவாதி வாதிக்கு வாய்மொழி பரிவர்த்தனை மூலம் கொடுத்த மேற்படி நிலத்தை வாதி வசம் உள்ளதை மறைத்துவிட்டு வடபுறத்தில் வாதி வீதத்திற்கு கொடுக்கப்பட்ட உயிலில் கண்ட B பட்டியலில் உள்ள 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை 05.02.2014ம் தேதி செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார்.

அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி 24.12.2014ம் தேதி 3ம் பிரதிவாதியிடம் பெந்தகம் வைத்தது போல் ஒரு ஏற்பாடு செய்துள்ளார். அவ்விதம் இரண்டு ஆவணங்களும் பதிவு செய்யப்பட்ட பிறகு 1ம் பிரதிவாதி பரிவர்த்தனை மூலம் உயிலில் கண்ட சொத்தில் உள்ள நடு பாகத்தை வாதிக்கு கொடுத்ததை 1ம் பிரதிவாதிக்கு சொந்தம் போல் கருதி அதை 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் தகராறு செய்து வருகிறார். வாய்மொழி பரிவர்த்தனை மூலம் உயில் படி 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்தை வாதிக்கு கொடுத்துவிட்டுதான் 1ம் பிரதிவாதி வாதிக்கு சொந்தமான A பட்டியல் சொத்தை பெற்றுக்கொண்டார். தற்போது உயில் படி வாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துவிட்டு பரிவர்த்தனை மூலம் வாதிக்கு கொடுத்த சொத்தை கேட்பது சட்டத்திற்கு புறம்பானதாகும். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 05.02.2014 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணமும் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு 24.12.2016ம் தேதி எழுதிக்கொடுத்த பெந்தக பத்திரமும் செல்லாது என்றும், C பட்டியலில் கண்ட 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களில் பிரதிவாதிகள் பிரவேசிக்கக்கூடாது என அசல் வழக்கு எண். 168/2018 என்ற வழக்கை வாதி பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதன் காரணமாக 1ம் பிரதிவாதிக்கு வாதி மேல் மனக்கசப்பு ஏற்பட்டது. தற்போது மீண்டும் சட்டத்திற்கு புறம்பாக வாதியின் அனுபவத்திலுள்ள B பட்டியல் சொத்தில் கண்ட 6 முதல் 26 அயிட்ட சொத்தில் இருந்த இரும்பு கேட்டையும் பூட்டையும் உடைத்து விட்டு அந்த சொத்தில் ஆக்கிரமிக்க முயன்றதை வாதி உடனடியாக தெரிந்துகொண்டு செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் 28.08.2018ம் தேதியும் 31.08.2018ம் தேதி நாகப்பட்டிணம் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் புகார் கொடுத்துள்ளார். பிரதிவாதி தொடர்ந்து 02.09.2018ம் தேதி முதல் வாதி அனுபவத்திலுள்ள B பட்டியல் சொத்தில் 6 முதல் 16 அயிட்ட சொத்துக்களில் உள்ள மரங்களையும் அத்துமீறி வெட்டி அப்புறப்படுத்தபோவதாக மிரட்டி வருகிறார். பிரதிவாதிகளுக்கு தாவா B பட்டியல் சொத்தில் எந்தவிதமான உரிமையும் அனுபவமும் கிடையாது. எனவே தாவா B பட்டியலில் கண்ட 6 முதல் 26 அயிட்ட சொத்துக்களில் பிரதிவாதிகள் ஆக்கிரமித்து வேலியை வெட்டவோ, மரங்களை வெட்டவோ கூடாது

என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. 1, 2 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியும், போதிய கால அவகாசம் கொடுத்தும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 04.04.2019 அன்று தோன்றாத் தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார்கள். 3ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 23.11.2018 அன்று தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது

**5. வாதி வழக்குரையில் கோரியவாறு வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சினை ஆகும்.**

6. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் மூலம் தனது தரப்பு வழக்கை நிரூபித்துள்ளரா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், வாதி கடந்த 04.09.1977 தேதியிட்ட வாதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் வாதியின் தகப்பனார் ராமசாமி நாயுடு எழுதிவைத்த பதிவு பெற்ற உயில் சாசனம் வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா B பட்டியலில் கண்ட 6 முதல் 26 அயிட்ட சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது

புலப்படுகிறது. 25.06.2018 தேதியிட்ட தாவா சொத்து குறித்த சிட்டா மற்றும் அடங்கல் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 30.11.2018 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து கிராம நிர்வாக அலுவலர் வாதி பெயருக்கு வழங்கிய சிட்டா மற்றும் அடங்கல் வா.சா.ஆ.8 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா B பட்டியலில் கண்ட 6 முதல் 26 அயிட்ட சொத்துக்கள் வாதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் உள்ளது என்பது புலப்படுகிறது. வாதி 1ம் பிரதிவாதி மீது 28.08.2018 அன்று செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கான ரசீது வா.சா.ஆ.3 ஆகவும், 31.08.2018 அன்று மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாருக்கான ரசீது வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி பிரதிவாதிக்கு எதிராக மயிலாடுதுறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.274/2017 ன் வழக்குரை வா.சா.ஆ.5 ஆகவும், பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா B பட்டியல் சொத்தில் உள்ள 6 முதல் 26 அயிட்ட சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதும், வாதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் உள்ளது என்பதை வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. மேற்படி வாதி தனது வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் கூறியுள்ளதை மறுத்து அவர்களது தரப்பை கூற வேண்டியது பிரதிவாதிகளின் கடமை ஆகும். ஆனால் பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்குரையை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார்கள். எனவே மேற்கண்ட ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. எனவே, வாதி அனுபவத்திலுள்ள தாவா B பட்டியல் சொத்திலுள்ள 6 முதல் 26 அயிட்ட சொத்துக்களில் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ ஆக்கிரமித்து அதிலுள்ள வேலியையோ, மரங்களையோ வெட்டி அப்புறப்படுத்தக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

முடிவாக, இந்த வழக்கு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகையில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு , அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 21.09.2023 இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

(ஒப்பம்) P.கனிமொழி,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி

**பின் இணைப்பு:-**

**வாதி தரப்பு சாட்சிகள்:-**

**வா.சா.1. ரெங்கபாஷியம் ( வாதி)**

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| வா.சா.ஆ 1 | 25.06.2018 தேதியிட்ட சிட்டா |
| வா.சா.ஆ 2 | 25.06.2018 தேதியிட்ட அடங்கல் |
| வா.சா.ஆ 3 | 28.08.2018 தேதியிட்ட புகார் ரசீது |
| வா.சா.ஆ 4 | 31.08.2018 தேதியிட் புகார் ரசீது |
| வா.சா.ஆ 5 | O.S 274/2017 ன் வழக்குரை |
| வா.சா.ஆ 6 | O.S 274/2017 ன் எதிர் வழக்குரை |
| வா.சா.ஆ 7 | 04.09.1977 தேதியிட்ட உயில் பத்திரம் |
| வா.சா.ஆ 8 | 30.11.2018 தேதியிட்ட சிட்டா மற்றும் அடங்கல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:-** இல்லை.
**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-** இல்லை

(ஒப்பம்) P.கனிமொழி,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி

// உண்மை நகல் //
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி